# கடற்கரை கவியரங்கு– 657

நாள்: **04-01-2026**

# எளிமை என்னும் இயல்பு!

ஏழ்மை யென்பதும் எளிமை என்பதும்
ஒன்றாய் இருக்கும் பார்வை யிலே!
தோற்றம் தன்னில் பொலிவு காண்பார்,
தொலைந்து போவார் தன்னிலையிலே!

ஏழ்மை தன்னில் கூச்சம் இருக்கும்!
எளிமை தன்னில் மிடுக்கு தெரியும்!
ஏழ்மை என்பது காலத்தால் மாறும்!
எளிமை என்பது என்றும் நிலைக்கும்!

வாலிப அழகும் வனப்புடை செல்வமும்,
முதுமையில் வந்து முகவரி மாற்றும்!
எளிமையின் தோற்றம் என்றும் மாறாது!
இல்லாமை இயலாமை எதையும் சாராது!

எண்ணிடும் கலன்கள் ஏதுமின் மையால்,
தன்னிலை மறவாத தன்மையாய் வாழும்!
அந்நிய சக்திகள் அலைக்கழித் தாலும்,
அவர்நிலை என்றும் தன்னிலை பிறழாது!

ஏழ்மை தன்னில் எளிமை பூண்டார்,
இன்னும் கொஞ்சம் சிறப்பாய் வாழ்வர்!
ஏழ்மை நீங்கிய வாழ்வில் சிலரிடம்,
எளிதாய்ப் பிறக்கும் செருக்கும் தானே!

-வேறு-
எளிமையதுவோ தேடலைத் தூக்கி நிறுத்தாது!
இனிமையாய் மனதில் நின்றே ஆட்சி செய்யும்!
தனிமையோடு எளிமை இயைந்து கொள்ளும்!
எளிமை கொள்வார் வாழ்வார் நாளும் சிறந்தே!

- **கவிஞர் கவிவளவன்.**
04-01-2026